மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

(2054 திருவள்ளுவர் ஆண்டு ஆடி திங்கள் 11–ம் நாள்)

2023–ம் ஆண்டு ஜூலை திங்கள் 27–ம் நாள் வியாழக்கிழமை

I.A.03/2023

in

OS.No.11/2021

ரெங்கநாயகி . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மணிவேல்
2. ராமலிங்கம்
3. செல்வகுமார் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 06.07.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சேவியர் மற்றும் செல்வி.M.கனகவள்ளி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரையையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........

## உத்தரவு

1. மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 7, விதி 14(3) மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:–**

2.1) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது மனுதாரர் தரப்பு ஆவணங்களாக பட்டா எண்கள்.1395 மற்றும் 563 ஆகியவற்றிற்கான கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல்களை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில், மேற்குறிப்பிட்ட பட்டாக்களில் மனுதாரரின் பெயர் இல்லை. பின்னிட்டு மனுதாரரின் பெயர் பட்டாக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் வழக்கு சொத்தை பொறுத்து 19.05.1983–ம் தேதியன்று கந்தசாமி, பெருமாளுக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலும், 22.03.1993–ம் தேதி பெருமாள், சின்னசாமிக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலும் மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்வதற்கு அனுமதிக்கும்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:–**

3.1) மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர்களால் குறிப்பிட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, மற்ற அனைத்து சங்கதிகளையும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இம்மனு சட்டத்தின்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல.

3.2) வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு வழக்கு விவரங்களை கூறாமலும், பிரதிவாதிக்கு எந்த ஒரு அறிவிப்பும் கொடுக்காமலும் பட்டா

பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதால், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதாகும்

**5) இருதரப்பும் கேட்கப்பட்டது.**

6) மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது வாதி தரப்பில் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, சான்றாவணங்களை குறியீடு செய்வதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்த ஆவணத்தில் மனுதாரரின் பெயர் இல்லை என்றும், பின்னிட்டு தான் மனுதாரரின் பெயர் சேர்க்கப்பட்டதாகவும், அவ்வாறு பெயர் சேர்க்கப்பட்டதற்கான ஆவணங்களையும், மற்ற ஆவணங்களையும் அசல் வழக்கில் குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டி கட்சி செய்திருந்தாலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்களை கேட்காமல் மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதால், அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என ஆட்சேபணை செய்திருந்தாலும், மனுதாரர் தனது மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்து அனுமதித்து வழக்கை நடத்தினால் தான் வழக்கை உரிய முறையில் தீர்மானிக்க முடியும் என்பதோடு, மனுதாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதா, வேண்டாமா என்பதை

விசாரணையில் தான் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதால், மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7) இறுதியாக,**

மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது 27.07.2023–ம் நாளான இன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–**
இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–**
இல்லை.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2023.07.27 20:58:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.